**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 2/2024 தேதி- 29.06.2026

(P..W.1) . ஜீவா ரோஸ்

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு பட்டிகை சொத்துக்களை எனது கணவர் செல்லத்துறை என்பவர் 01.06.2016 அன்று முஞ்சிறை சார்பதிவாளர் அலுவலர் மூலம் என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி தந்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம்மூலம்தான் வழக்கு பட்டிகை சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது வா.சா-ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2 ஆம் அயிட்டமாக இருப்பதுதான் வழக்கு பட்டிகை சொத்துக்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ- 3 வழக்கு பட்டிகை சொத்துக்களின் பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் 3 இதர நபர்களின் பெயரும் எனது பெயருமாக கூட்டுபட்டாவாக உள்ளது என்றால் சரிதான் மேற்படி 3 நபர்களும் எனது கணவரின் அண்ணன் மற்றும் தம்பிகள் ஆவார்கள்.

எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் கிடைத்த பிறகு வழக்கு பட்டிகை சொத்துகளுக்கு நான் தனிப்பட்டா பெறவில்லை கூட்டுபட்டாவாகத்தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்துக்களுக்கு முன்வருவாய்த்துறை ஆவணங்களின்படிதான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்துக்கள் எனக்கு கிடைத்த பிறகும் வருவாய்த்துறைக்கு உட்பிரிவு செய்ய மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**1 முதல் 4 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**